stered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 27
தேசியதினசரி

[illegible] மாசி 25 ஜுல்ஹஜ் 8 வெள்ளிக்கிழமை (8-3-68)

அழகிற்கு அழகூட்டும் அலங்கார ஆபரணங்கள் வாங்கி மகிழ
அம்பலவாணர்
நகை மாளிகைக்கு
இன்றே வருகை தாருங்கள
பொ. அம்பலவாணர்
தங்க வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி : வைரம்
தொலை பேசி: 7199

# கச்சதீவு யாத்திரிகர்களுக்கு ஏழு இடங்களில் பரிசோதனை

## முப்படைகளின் பலத்த கண்காணிப்பு

### அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் செய்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் சர்ச்சைக்கிடமாகியுள்ள கச்சதீவில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் அர்ச் அந்தோனியார் திருநாளை ஒட்டி முப்படைகளின் பலத்தகண்காணிப்பும் அங்கு ஏற்படுத்துவதென நேற்றுமாலை அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற உயர்தர அதிகாரிகளின் மகாநாடொன்றில் முடிவு செய்யப்பட்டது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சி. தவராசா, யாழ்ப்பாணம் மேற்றிராணியார் வண. எமிலியானுஸ்பிள்ளை, காரியாதிகள் உட்பட பல அரசாங்க உயர்தர உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வடபகுதி சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப்பகுதி சுப்பிரிண்டன் திரு. ஸ்டான்லி சேனநாயகா முப்படைகளுக்குப் பொறுப்பாக விருப்பார். இங்கிருந்து கச்சதீவு செல்லும் யாத்திரிகர்கள் ஊர்காவற்றுறை குறிகட்டுவான், மாவடித்துறை பெரியதுறை, குருநகர்,

(6-ம் பக்கம் பார்க்க)

## 'பிரிந்தவர் கூடும் தீவு'

சென்னை, மார்ச் 7

கச்சதீவு 'பிரிந்தவர் கூடும் தீவு' என ராமநாதபுர ராஜா வர்ணித்துள்ளார்.

பலவித சூழ்நிலையால் பிரிக்கப்படும் மக்கள் ஒன்று கூடி உறவு கொள்ள இத்தீவு உதவிவருவதாக அவர் எடுத்துக் கூறுகையிலேயே தாம் இத்தீவுக்கு 'பிரிந்தவர் கூடும் தீவு' எனப் பெயரிட்டு அழைக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

## தபால், தந்தி உதவி மந்திரியின் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தபால் தந்தி பகுதி உதவி அமைச்சரும், கட்டானை தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. விஜயபாலா மென்டிஸ் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

நெல்லியடியில் நிறுவப்பட்ட தன்னியக்கத்தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தைதிறந்துவைக்க உடுப்பிட்டித்தொகுதி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் அழைப்பின் பேரில் இவர் இங்கு வந்தார். சுகவீனம் காரணத்தால் திரு. மு. சிவசிதம்பரம் திரு. விஜயபால மென்டிஸுடன் இங்கு வரவில்லை.

நேற்றுக் காலை விமான நிலையத்தை வந்தடைந்த உதவி அமைச்சரை தபால் தந்திப்பகுதி மாவட்ட சுப்பிரிண்டன் திரு. எஸ். தர்மலிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோர் உட்பட தபால் தந்திப்பகுதி உயர்தர அதிகாரிகள் மலர் மாலையிட்டு வரவேற்றனர்.

தேசியஅரசாங்கம்அமைக்கப்பட்ட பின்னர் திரு. விஜயபால மென்டிஸ் வட

[6-ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

பொல்காவலையில் நேற்று இழுக்கப்பட்ட 184-ம் இலக்க தேசிய சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
02 G 0839 ரூ. 100,000

2-வது பரிசு
22 P 0976 ரூ 40,000

3-வது பரிசு
29 P 0338 ரூ. 10,000

(6-ம் பக்கம் பார்க்க)

## 103 வயது சாதுவின் மகா யக்ஞம்

பங்களூர், மார்ச் 7

சீதாராம் யோகீஸ்வரஜீ என்ற 103 வயதான சாது உலக மக்களின் நன்மைக்காக ஒரு மகா யக்ஞம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார். இதற்கு 40 லட்சம் ரூபா செலவாகும். நாடு முழுவதிலுமிருந்து இந்த யாகத்துக்கு நன்கொடைப்பணம் கேட்டிருக்கும் இந்த சாது அப்பணத்துக்கு வரி விதிக்கவேண்டாமென்றும் அரசாங்கத்தை கேட்டிருக்கிறார். இந்த யக்ஞம் பம்பாயில் நடக்கும்.

கோதபயா கொலை வழக்கு:

## செல்வி போலினுக்கு மரண தண்டனை

கொழும்பு, வியாழன்

**கோதபயா சிறுவன் கொலைவழக்கில் முதலாம் எதிரி செல்வி போலின் குருஸுக்கு இன்று மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.**

கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரணை செய்த பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ செல்வி போலின் குருஸுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

மந்திராலோசனையின் பின் 6 ஜூரிகள் சாதகமாகவும், 1 ஜூரர் பாதகமாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார்.

இவ்வழக்கில் கோதபயா இரபகந்த என்ற சிறுவனைக் கொலை செய்ததாக செல்வி போலின் குருஸ் மீதும், அவரின் காதலர் என்று கூறப்படும் கொலையுண்ட சிறுவனின் தந்தையுமான கிரபகந்தா மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சென்ற சனிக்கிழமை விசாரணை நடுவில் இரண்டாம் எதிரியான கொலையுண்ட சிறுவனின் தந்தை இரபகந்தா நீதியரசரால் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது தெரிந்ததே

கொலையுண்ட சிறுவனின் சடலம் தெஹிவளையிலுள்ள தேவாலயத்துக்குப் பக்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

## எமில்சவுந்தராவுக்கு 8வருட சிறை; 50,000பவுன் அபராதம்

லண்டன், மார்ச்,7

இலங்கையரான டாக்டர் எமில் சவுந்தராவுக்கு 8 வருட சிறைத்தண்டனையும் 50.000 பவுன் அபராதமும் லண்டன் நீதிமன்றம் இன்று விதித்தது.

இவருடன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வாக்கர் என்பவருக்கு 5 வருட சிறையும் 30 ஆயிரம் பவுன் அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பொய்ப்பத்திரங்கள் தயாரித்தது, மோசடி செய்யச சதிசெய்தது, இருகணக்கு அறிவித்தல்களில் பொய்த்தகவல் கொடுக்கச் சதிசெய்தது என்பன உட்பட 6 குற்றச்சாட்டுகள் இவர்கள்மீது சுமத்தப்பட்டிருந்தன.

6 மோசடி குற்றச் சாட்டுகளில் ஐந்தில் எமில் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப் பட்டிருந்தார்.

சவுந்தரா அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் 2 வருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப் பட்டது.

மனோஹரா (யாழ்ப்பாணம்) (8-3-68) இன்றுமுதல்

றக்குலா [DRACULA]

பெற்றோர்களுக்கு ஓர் வேண்டுகோள்: [illegible] இப்படத்திற்கு தனிமையில் அனுப்பிவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமய நூல்களைப் படித்து அறிவு பெறுவது மட்டும் போதாது. நமக்கு உள்ளேகோயில் கொண்டிருக்கும் உத்தமனை உணர்ந்து, உறவு கொண்டாலே மேலான இன்பமும் பயனும் கிடைப்பதாகும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 25ம்திகதி [8-3-68]

## பால் உணவு கஷ்டம்

இருந்தும் இல்லாத நிலை என்று சொல்லுவார்களே அந்த நிலையில்தான் 'நெஸ்பிறே' போன்ற பால் உணவும் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இரண்டு மூன்று பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து 'நெஸ்பிறே' போன்ற பால் உணவு டின்களை இறக்குமதி செய்துள்ள போதிலும் அவற்றை விநியோகிப்பதிலும் விற்பனை செய்வதிலும் வீண் கஷ்டம் அனுபவிக்கின்றன. இக்கஷ்டம் பற்றி டாக்டர் கனகரத்தினம் எழுதியுள்ள கடிதத்தை பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். வர்த்தக ஸ்தாபனங்களுக்கு வீண் கஷ்ட நஷ்ட மேற்படாமலும் பால் உணவு உண்மையில் தேவைப்படுபவர்களுக்குக் கிடைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்றவர்களுக்கும் பால் உணவின் சிலர் கொள்ளைலாபம் அடிப்பதைத் தடுப்பதற்குமாகவே அரசாங்கம் 'நெஸ்பிறே' போன்ற பால் உணவு டின்களின் விநியோகம், விற்பனை ஆகியவைகளுக்குக் கட்டுப்பாடு விதித்துள்ளது. இது அவசியமும் கூட. ஆனால் இந்தக் கட்டுப்பாட்டு முறைகள் வர்த்தகர்களுக்கு வீண் கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது. இதே சமயம் பொது மக்களுக்கு அதுவும் குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் கிடைப்பதையும் தடுப்பதாகவும் இருக்கக்கூடாது. கட்டுப்பாட்டு முறை சரியாக அமுல்நடத்தப்பட்டு வசதி குறைந்த எளியமக்களுக்கும் அவசியமான உணவுப் பொருள்கள் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

பால் உணவுப்பொருள்களுக்காக நமது பணத்தில் பெரும் பகுதி வெளிநாட்டுக்குப் போவது கவலைக்குரியதே. ஆயினும் குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் அத்தியாவசியத் தேவையான பால் உணவு அவர்களுக்குக் கிடைக்க வழிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நமதுநாட்டில் கால் நடை வளர்ப்புக்கு ஊக்கமும் உதவியுமளித்தால் நமக்குத் தேவையான சுத்தமான பாலை நாம் பெற முடியும் நமது நாட்டிலுள்ள பசுக்களை ... றைச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளும்

யாவந்தான் நமது குழந்தைகளுக்குப்பால் கிடைக்காமல் ''எப்போதுகப்பல் வரும், எந்தக்கடையில் 'நெஸ்பிறேக்கு' கியூ' நிற்கிறது, எந்த வைத்தியரிடம் 'நோயாளி' என்று வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பெற்று நெஸ்பிறே வாங்கலாம்?'' என்ற ஆவலின் அலைந்து திரிகிறோம்.

பசுபாதுகாப்புவளர்ப்பு ஆகியவைகளில் அரசாங்கமும்பொது மக்களும் அக்கறை செலுத்தினால் பாலுணவுக் கஷ்டம் ஏற்படமாட்டாது.

# ஆலயப் பிரவேசம்: அரசாங்க அதிபர் கூட்டும் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆலயப் பிரவேசம் சம்பந்தமான அவசர மகாநாடொன்று இம்மாதம் 10-ம் திகதி காலை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

செல்வச்சந்நிதி ஆலயப் பிரவேச வழக்குக்கு உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து நடைபெறும் இம்மகாநாட்டில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான சில தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படலாமென உயர்தர அரசாங்க அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். ஆலயப் பிரவேசத்தை சுமுகமான முறையில் நடாத்த ஆலய முகாமையாளர்களின் ஒத்துழைப்பும் இம்மகாநாட்டு முடிவில் கோரப்படலாம் எனத்தெரிகின்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் இம்மகாநாடு நடைபெறவிருக்கின்றது. வடபகுதியில் இரு சமூகத்தவருக்கிடையில் நடைபெற்றுவரும் இப்பிரச்னைபற்றி சகல முடிவுகளையும் இம்மகாநாட்டில் மேற்கொள்ளவிருப்பதால் காரியாதிகாரிகளும் முக்கிய அதிகாரிகளும் இம்மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். [கா. நி.]

## பம்பாயில் தீ

பம்பாய், மார்ச். 7

பம்பாயில் நேற்றுக்காலை ஏற்பட்ட வொரு தீ விபத்தில் 2 வாசஸ்தல கட்டிடங்கள் தீக்கிரையாகின. மற்றுமொன்று பாதி எரிந்தது. சுமார் 200குடும்பங்கள் வீடிழந்துள்ளன. ஆனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

## 34 பால்டின்கள் சிக்கின

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையில் திருநெல்வேலியில் ஒரு கடையில் 34 பால் டின்கள் சிக்கின.

விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளான திருவாளர்கள் மார்க்கண்டு, சண்முகலிங்கம், வி. செல்லமுத்து. எஸ். தப்பு ஆகியோர் நேற்று பல கடைகளில் சோதனையிட்டனர்.

திருநெல்வேலியிலுள்ள ஒரு வர்த்தகர் கடையில் 34 பால்டின்கள் வைத்துக்கொண்டு விற்பனை செய்ய மறுத்ததால் விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளிடம் சிக்கினார்.

இந்த வர்த்தகர்மீது வழக்கு தாக்கல் செய்யப்படுமென விலைக்கட்டுப்பாட்டதிகாரியொருவர் கூறினார். யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் உத்தரவின்படி இத்திடீர் பரிசோதனை நடைபெற்றது.

## இலக்கியத்துக்கும் ஓர் உபகுழு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பிரதேச கலாமன்றத்தின் மத்திய செயற்குழுவின் கூட்டம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் அரசாங்க செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச கலாமன்றத்தில் நடனம், நாடகம், கைப்பணி, சித்திரம் ஆகியனவற்றிற்கு ஒவ்வொரு உபகுழு இருப்பதுபோல இலக்கியத்துக்கும் ஓர் உபகுழு அமைக்கவேண்டுமென்ற மகாசபையின் தீர்மானம் இங்கு அங்கீகரிக்கப்பட்டு அதன்தலைவராக மகாகவியே நியமிக்கப்பட்டதுடன், அதற்கான உபகுழுவொன்றை அமைக்கும் பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உபகுழுவும் வருடாந்தஅறிக்கையை இரு வார காலத்தில் மத்திய செயற்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. (கா. நி.)

## இன்றைய பலன்

[8-3-68]

வெள்ளிக்கிழமை

[மாசி மீ 25உ]

திதி- நவமி இரவு 3-12 மேல் தசமி.

நட்சத்திரம்- மிருகசீரிடம் பகல் 2-43 மேல் திருவாதிரை.

ராகுகாலம்-10-55—12-25.

சுபநேரம் 6-25 — 7-55.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு சமபோகமான பலன்களையே குறிப்பிடுகின்றது. வரவுக்கேற்ற செலவு இருந்து கொண்டே வரும். சிலர் கடன்பட நேரிடலாம். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கவும். குடும்ப வாழ்வில் சிலசில பிணக்குகள் தோன்றி மறையும். அன்னியர் தலையீட்டைத் தவிர்க்கவும். நோய்கள் பீடிக்காவண்ணம் வருமுன் காத்தல் நன்று. சுமாரான ஆண்டு.

மேஷம்- நிதி குவியும், நிதானம் வேண்டும்.

ரிஷபம்- உறவுக்குத் துறவு, பிரிவுக்கு இடம்.

மிதுனம்-நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

கடகம்- குடும்பம் சிறக்கும், செல்வாக்கும் பெருகு

சிம்மம்- சிரம் தாழ்த்த நேரிடும், சிந்தித்துச்செயலாற்று.

கன்னி- அன்னை மொழி அமிர்தம், அமைதியுடன் இரு.

துலாம்- நேசக் கரம், இணைத்துப் பாசத்தை வளர்.

விருச்சிகம்- திடீர் தாக்குதல், திகைக்க வைக்கும் சம்பவம்.

தனுசு- காதல் சுரக்கும், எண்ணம் இனிக்கும்.

மகரம்- மாயத் தோற்றம், மனதை அடக்கு.

கும்பம்- தந்தை வழி ஆதரவு, தன்மானமிகுதி.

மீனம்- புதிய திருப்பம், புத்துணர்ச்சி.

திருமலை வேலுப்பிள்ளை

ஆசிரியருக்கு கடிதம்:

## பால் உணவுகள்

குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் முதலியவர்களுக்கு நெஸ்பிறே முதலிய பால் உணவுகளை வாங்க பொதுமக்கள் துடிக்கிறார்கள். நாலைந்து பெரிய கடைகளில் ஏராளமான பால் உணவுப் பொருட்கள் இருக்கின்றன. இவை கூட்டுறவு யூனியன்களுக்கும் அரிசி கூப்பன் தொடர்பு வைத்திருக்கும் கடைகளுக்கும் சிலவற்றை விற்றுப்போடுகின்றனஆனால்பொதுமக்களுக்கு ஒரு அரை றாத்தல்தானும் கிடைப்பது அபூர்வமாயிருக்கிறது.

பெரிய சாய்ப்புக் கடைகள் ஏராளமான பணத்தை செலவழித்து பாலுணவுகளை வாங்குகின்றன. இவை வந்துசேர்ந்ததும் தாம் உத்தரவு கொடுக்கும்வரை அவற்றை வைத்திருக்கும்படி அரசாங்க அதிபர் உத்தரவு கொடுக்கிறார். ஏராளமான பொருட்கள் வரும் என்று தெரிந்திருந்தும் அவற்றை சமமாகப் பங்கிட்டுக்கொடுக்க அவருக்குத் தெரியவில்லை. எவ்விதம் இப்பொருட்களை பங்கிடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கடைக்காரர் தாம் கடன் வாங்கி இப்பொருட்களை வாங்கியதற்காக வட்டி கொடுக்கவேண்டும்.

இதற்கிடையில் உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரி கச்சேரி குமாஸ்தாக்களுக்கும் அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கும் பெர்மிட்டுகளை வழங்குவார். உண்மையில் தேவைப்படுபவர்கள் அரசாங்க அதிபரின் முடிவை எதிர்பார்த்திருப்பார்கள்.

மல்லி, மிளகாய் தட்டுப்பாடுஏற்பட்டபோதும் இப்படியானதடுமாற்றமும் தவறான முடிவும் நிகழ்ந்தது.

அரசாங்க அதிபருக்கு ஒரு வேளை வேலைகள் கூடுதலாயிருக்கலாம். அப்படியானால் வேறு யாராவது இந்த வேலையை கவனிக்க முடியாதா?

டாக்டர் கே. கனகரத்தினம்
யாழ்ப்பாணம்,
4-3-68.

## ஐயாறன்

(5ம் கலத் தொடர்ச்சி)

சுருக்கத்துடன் அழகாக அச்சிட்டு 50 சத விலைக்கு வெளியிட்டுள்ளனர். வேண்டுவோர் அகில இலங்கை சேக்கிழார் மன்றம், யோக பவனம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

சைவத்துக்குச் சோதனை ஏற்பட்ட காலத்தில்தான் தமிழகத்தில் பெரிய புராணம் அருளப்பட்டது. இப்போதும் தமிழகத்தில் சைவத்துக்குப் பெரிய சோதனை. அங்கும் இந்தப் பரீட்சையை நடத்தி, மாணவர்கள் சைவநெறியில் வாழ அறிவூட்டினால் அது எவ்வளவோ பயன் தரும். பல தமிழக ஆதீனங்கள் இதைக் கவனிக்குமா?

ஃ ஃ

உலகெலாம் உணர்ந்து
ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர் மலி
வேணியன்
அலகில் சோதியன் அம்
பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி
வணங்குவாம்.

—சேக்கிழார் பெருமான்.

## தரம் உயர நடவடிக்கை

உடுப்பிட்டி, வியாழன்

பருத்தித்துறையிலுள்ள புற்றளை வித்தியாலயம் விரைவில் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

# ஐயாறன் எழுதுவது

கச்சதிவுக்கு இம்முறை பலர் போகப்போகிறார்களாம். ஏன் தெரியுமா? அங்கு இந்தியாவிலிருந்து பலபல சாமான்களும், பழவகைகளும், துணிவகைகளும், பித்தளைப் பாத்திரங்கள் எல்லாம் கொண்டுவந்து கடை வைப்பார்களாம். இதையெல்லாம் கேட்டபோது யாருக்குத்தான் அங்கு செல்லவேண்டுமென்று இராது?

சென்ற வருடங்களில் அங்கு சென்றுவந்த சில [கத்தோலிக்கரல்லாத] அன்பர்கள் பலபல அனுபவங்களையும் தெரிவித்தனர். குடிதண்ணீர் கூட அங்கு கிடையாது. ஒரே ஒரு கிணறு. அதிலும் தண்ணீர் ஒரே உப்பு இங்கிருந்து படகில் குடிதண்ணீர் கொண்டு செல்லுவதாயும், இடுப்பளவு தண்ணீரில் 'கியூ' வரிசையில் நின்றுதான படகிலிருந்து தண்ணீர் பெறவேண்டுமென்றும் தெரிவித்தனர். அங்கிருந்து ஏதாவது வாங்கிவந்தால், இங்கு இறங்குதுறையில் பொலிஸார் நின்று, தங்கள் மனம்போனபடி 'தீர்வை' போட்டு பணம் எடுத்துக் கொள்வதாயும், பற்றுச்சீட்டும் கொடுப்பதில்லை என்றும் சொல்லுகிறார்கள். உண்மைதானா?

ஃ ஃ

இந்தச் சின்னத் தீவு, ஒரு மைல் நீளமும், முக்கால் மைல் அகலமும் உள்ளதாம் இது தமக்கே சொந்தமென்று ராமநாதபுரம் ராஜா அத்தாட்சி காட்டுகிறாராம், இலங்கைக்குத்தான் சொந்தமென்றும், அனுபவ பாத்தியமென்றும் இலங்கை வாதிக்கின்றது. இதை இரு தேசப் பிரதிநிதிகளும் கூடிப்பேசி, ஏதாவது நல்ல ஏற்பாடுசெய்வர். இதனால் 'சண்டை' ஏதும் ஏற்படாதென்பது உறுதி.

இரு தேச மக்களும் வருடம் ஒருமுறையாவது சந்தித்துப் பேச இந்தத்தீவு பொது இடமாக உதவுகின்றது. என்னைக் கேட்டால் அந்த இடம் அங்கு கோவில்கொண்டுள்ள அந்தோனியாருக்கே சொந்தமென்பேன். அதுமட்டுமல்ல, ''உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே'' என்ற பூமிதானத் தொண்டர்கள் பாடும் பாட்டு எனக்கு நினைப்பு வருகிறது. ஆனால் இதை யார் கேட்கப்போகிறார்கள்?

ஃ ஃ

நேற்று ஒரு நல்ல செய்தி கேள்விப்பட்டேன். இங்கு சைவ மாணவர்களிடையே சைவ அறிவும், தமிழறிவும் வளர்க்க, அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தார், பெரிய புராணப் பரிசுப் போட்டி நடத்த முன்வந்துள்ளனராம். வருகிற மே மாதம் 4ந் திகதி பரீட்சை நடத்தி, சேக்கிழார் குருபூசையன்று மூன்று பரிசுகள், தங்கப்பதக்கம், பணம் முதலியன கொடுத்து ஊக்குவிக்க ஏற்பாடு செய்துள்ளதாயும், இதுவரை 50 பள்ளிக்கூடங்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள முன்வந்துள்ளதாகவும் தெரிகிறது. இம்மாதம் 15ந் திகதிக்கு முன் இதற்கு மனுச் செய்யவேண்டுமாம். பரீட்சைக்குக் கட்டணமெதுவுமில்லை. இதைக் கல்விப் பகுதியினரும் அங்கீகரித்துள்ளனராம்.

பரீட்சைப் பாடங்களடங்கிய பெரியபுராணப் பகுதிகளைச் சேக்கிழார் சரித்திரச்

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 ஆபிரிக்கர்களை தூக்கிலிட்ட ரொடீஷிய அரசுக்கு உலகெங்கும் கண்டனம்

## இந்திய பார்லிமெண்டில் நிமிட நேர மௌன அஞ்சலி

சலிஸ்பரி, மார்ச் 7

**பிரிட்டிஷ் ராணி எலிசபெத்தின் உத்தரவையும் மீறி, மூன்று ஆபிரிக்கர்களைத் தூக்குலிட்ட சட்டவிரோத ரொடீஷிய அரசாங்கம், உலக நாடுகளின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.**

**மூன்று ஆபிரிக்கர்களும் தூக்கிலிடப்பட்ட செய்தி கேட்டுத்நாம் அதிர்ச்சியடைந்துள்ளதாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட் தெரிவித்தார்.**

ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன், ரொடீஷிய அரசாங்கத்தின் செயல் மனித நீதிக்கு முரணானது என்று கூறியுள்ளதுடன், பிரிட்டிஷ் அரசாங்கம் ரொடீஷியாவிலுள்ள சட்ட விரோத சிமித் ஆட்சிக்கெதிராகப் பலமான நடவடிக்கை எடுக்கத் தவறியதே, அது இவ்வித கொடுமையான செயல்களில் ஈடுபடத் தூண்டுகோலாக அமைந்ததென்றும் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில், அமெரிக்க ராஜாங்க இலாகா, ரொடீஷியாவின் நடவடிக்கையை "வெறுக்கத்தக்கது" என விவரித்தது. இந்த நடவடிக்கை மூலம், ரொடீஷியப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கும் சந்தர்ப்பத்தையும் அது இழந்து விட்டிருக்கலாமென்றும் ராஜாங்க இலாகா கருத்து வெளியிட்டது.

எதியோப்பியா, ரொடீஷியாவின் நடவடிக்கையை அநீதியானதென்றும், அருவருக்கத்தக்க கொடுமை என்றும் கூறியுள்ளது.

தடை செய்யப்பட்டுள்ள ரொடீஷிய கட்சியான ஆபிரிக்க மக்கள் யூனியன், இந்தக் கொலைக்குக் காரணமானவர்களைக் கிடைக்கும் முதற் சந்தர்ப்பத்திலேயே சுட்டுக் கொல்ல வேண்டுமெனச் சூளுரைத்திருக்கிறது.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் காரியதரிசி தொம்ப்ஸன் பிரபுவும், 3 ஆபிரிக்கர்களும் தூக்கிலிடப்பட்ட செய்தி கேட்டுத் தாம் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

நேற்று, அமைதி நிறைந்த பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பேசுகையில், நிலைமை மோசமான நிலையை அடைந்துள்ளதாக தொம்ப்ஸன் பிரபு கூறினார். இனி, அடுத்த நடவடிக்கையை பிரிட்டிஷ் மந்திரி சபையே எடுக்குமெனவும் அவர் குறிப்பிட்டார். ராணியின் உத்தரவை ரொடீஷிய அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதைத் தொடர்ந்து கிளம்பியுள்ள சட்ட, அரசியற் சாஸன ரீதியான பிரச்னைகளையும் மந்திரி சபையே ஆராயவிருக்கிறது என்றும் தொம்ப்ஸன் பிரபு தெரிவித்தார்.

மூன்று ஆபிரிக்கர்களினதும் மரண தண்டனையை ஆயுட் காலத் தண்டனையாக்கும் எலிசபெத் ராணியின் தீர்ப்பை ரத்துச் செய்த ரொடீஷிய பிரதம நீதிபதியை, ரொடீஷிய கவர்னர் பதவிக்கான வாரிசு வரிசையிலிருந்து நீக்குவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடுத்த உத்தேச நடவடிக்கையாகும் என்று தொம்ப்ஸன் பிரபு மேலும் கூறினார்.

### கொலைக் குற்றம்

லண்டனிலிருந்து கிடைக்கும் செய்திகள், ரொடீஷியாவிலுள்ள பிரதான ஆட்சியாளர் மீதும், மூன்று ஆபிரிக்கர்களையும் தூக்கிலிட்ட சேவகர் மீதும்கொலைக் குற்றங்கள் சுமத்த பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையாக ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கின்றன.

### ஒரு நிமிட அஞ்சலி

ரொடீஷிய அரசாங்கம் மூன்று ஆபிரிக்கர்களையும் தூக்கிலிட்டதையொட்டி, நேற்று இந்திய லோக சபையில் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. இறந்த மூன்று ஆபிரிக்கர்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக, இந்திய பார்லிமெண்டில் நேற்று அங்கத்தவர்கள் எழுந்து நின்று ஒரு நிமிட நேரம் மௌனம் சாதித்தனர்.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி ரொடீஷியாவின் செயல் அநாகரிகமானதும், மிருகத்தனமனதுமாகும்'' என்று குறிப்பிட்டார்

### ஐ. நா. வில்

ரொடீஷிய பிரச்னையை விவாதிக்க, ஐ. நா. பந்தோபஸ்து சபை இவ்வாற இறுதிக்குள் கூட்டப்படலாமென ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரொடீஷியா பற்றிய ஒரு தீர்மானத்தை விவாதிக்க ஐ. நா. பொதுச்சபை ஒரு அவசர கூட்டத்தை கூடியுள்ளது. சபையில் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி, ரொடீஷியாவின் நடவடிக்கை, உலக நாடுகளின் நாகரிகத்துக்கே சவால் விடுவதாக அமைந்துள்ளதென்றார். கொடுங்கோல் நடவடிக்கைகளில் ரொடீஷியா, தென்னாபிரிக்காவையும் மிஞ்சிவிட முயற்சிப்பதாகவும் அவர் கூறினார்.

---

## அந்நியர் சிலைகள்யாவும் இந்தியாவில் நீக்கப்படுகின்றன

புதுடில்லி, மார்ச் 7

இந்தியாவிலுள்ள எல்லா அந்நியர் சிலைகளையும் இந்திய அரசாங்கம் அப்புறப்படுத்தி வருவதாக இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், இந்திய பார்லிமெண்டில் அறிவித்தார்.

ஆனால், அந்த வேலையில் அவசரம் ஏதும் இருப்பதாக அரசாங்கம் காட்டிக் கொள்ள விரும்பவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

ராஜ்ய சபையில், கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில், டில்லியிலுள்ள 12 அந்நியர் சிலைகளில் 11சிலைகள் நீக்கப்பட்டுள்ளதாகத் திரு. தேசாய் கூறினார். அவற்றின் இடங்களில் இந்தியர்களின் சிலைகள் நிறுவப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

புதுடில்லியின் மத்தியிலுள்ள இந்திய வாயலில் நிறுவப்பட்டுள்ள ஒரேயொரு மீதியான 5-வது ஜோர்ஜ் மன்னர் சிலையிருக்கும் இடத்தில் விரைவில் மகாத்மா காந்தியின் சிலை இடம் பெறும்.

அப்புறப்படுத்தப்படும் அந்நியர் சிலைகள் யாவும் ஒரு பூங்காவில் நிறுவப்படவிருக்கின்றன. தே பூங்காவிற்குள் தான், ஜோர்ஜ் மன்னரும், மேரி ராணியும் தமது முடிநாட்டு தர்பாரை 1911-ல் நடத்தினர்.

---

## மொரிஷியசுக்கு சுதந்திரம்

### எதிர்க்கட்சி எதிர்ப்பு

போர்ட் லூயி, மார்ச் 7

மொரிஷியஸ் தீவின் எதிர்க்கட்சித் தலைவரான திரு. கெய்டான் டுவால், தீவின் எதிர் வரும் சுதந்திர விழாவினைத் தமது கட்சி பகிஷ்கரிக்குமெனத் தெரிவித்துள்ளார்.

மொரிஷியசுக்கு, பிரிட்டனிடமிருந்து அடுத்த செவ்வாய்க்கிழமை மார்ச் 12-ந் திகதியன்று, சுதந்திரம் கிடைக்க விருக்கின்றது.

சுபீட்சத்தை விடக் கஷ்டத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையுமேசுதந்திரம் கொண்டுவரும் என்ற அடிப்படையில் எதிர்க் கட்சியினரான சோஷலிச ஜனநாயக வாதிகள் தீவின்சுதந்திரத்தை எதிர்க்கின்றனர்.

---

## இயற்கையின் தன்னியக்கம்

மாஸ்கோ, மார்ச் 7

கிர்கிஸியாவில் உள்ள 'மெர்ட்ஸ் பாகர்' ஏரி கடல் மட்டத்திற்கு 10,000 அடி உயரத்தில் உள்ளது. அந்த ஏரியில் தேங்கியுள்ள நீருக்கு மதகாக இயற்கையிலேயே பனிக்கட்டிப் பாறை அமைந்துள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் பனிக்கட்டி உருகி வீழ்ந்து நீரை வெளியேற்றுகிறது. பல நூற்றாண்டுகளாக இதுபோல் ஏற்பட்டுவருவதால் வெளியேறும் நீர் 9 மைல் நீளத்திற்கு ஒரு பாதையையே வெட்டியுள்ளது. நீரைத் தடுத்து நிறுத்தும் பனிக்கட்டி மதகு உருகுவதால் பெரும் வெள்ளப்பெருக்கு [illegible] போல ஏற்பட்டுவருகிறது.

---

## ஒரே நேரத்தில் 434 ஜோடிகள் திருமணம்

சியோல், மார்ச் 7

தென்கொரியத்தலைநகரின் சியோலில், 434 ஜோடிகள் ஒரே தினத்தில் திருமணம் செய்து வைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும், உலகக் கிறிஸ்தவ ஒற்றுமைச் சங்கமொன்றின் அங்கத்தவர்களாவர். திருமணம்முடிந்ததும், தொடர்ந்து 40நாட்கள் இத்தம்பதிகள் பிரம்மச்சரியம் பூண்டு, தமது சமய வேலைகளில் ஈடுபடுவர்.

ஒரு பெரிய மண்டபத்தில் இந்த 434 ஜோடிகளும் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். உலகத்திலேயே ஒரே நேரத்தில் செய்யப்பட்ட அதிக தொகையான திருமணங்கள் இதுவே என அவற்றை ஒழுங்கு செய்துள்ள தேவாலயச் சங்கம் தெரிவித்துள்ளது.

---

## இந்திய லோகசபையில் ராண்-ஒவ்-கச் தீர்ப்பு

### எதிர்க்கட்சியினர்தீர்மானம் தோல்வி

புதுடில்லி, மார்ச் 7

ராண்-ஒவ்-கச் சம்பந்தமாகச்சர்வதேச விசாரணைச் சபை அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து எதிர்க்கட்சியினர் தாக்கல் செய்த தீர்மானமொன்று நேற்று இந்திய லோகசபையில் வாய்மொழி வாக்கெடுப்புக்கு விடப்பட்டுப் பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்தது.

சர்வதேச விசாரணைச் சபையின் தீர்ப்பு நீதியின் பாற்பட்டதன்று என்றும், அது அரசியல் ரீதியில்அளிக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கருத்து வெளியிட்டனர்.

### இந்திரா கருத்து

இது பற்றிப் பிரதமர் திருமதி இந்திரா காந்திகுறிப்பிடுகையில் எதிர்க்கட்சியினர் கருத்தைத் தாமும்பகிர்ந்து கொள்ளுவதாகவும், ஆனாலும் சர்வதேச விசாரணைச்சபையின் தீர்ப்புக்கு இந்தியா கட்டுப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியமென்றும் கூறினார்.

ராண்—ஒப்—கச் தீர்ப்பின் மூலம், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையேயான உறவுகள் அபிவிருத்தியடையுமெனத் தாம் நம்புவதாகவும் பிரதமர் இந்திரா கூறினார்.

---

## மத்திய-ராஜ்ய உறவுகள்

### அண்ணா விளக்கம்

சென்னை, மார்ச் 7

தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை தமிழக அரசிடம் மத்திய அரசு மிகவும் பரிவுடன் நடந்து வருவதாகத் தமிழக கீழ் சபையில் பேசுகையில் நேற்றுக் கூறினார்.

மத்திய-ராஜ்ய உறவுகளையிட்டுத் தமிழக அரசு குறை கூறினால், அது மத்திய அரசில் காங்கிரஸும், ராஜ்ய அரசில் தி. மு. க.வும் பதவியிலிருப்பதென்பதனால் அல்லவென்றும் திரு. அண்ணாதுரை தெரிவித்தார்.

---

## அழும் குன்று

மாஸ்கோ, மார்ச் 7

தூர கிழக்கிலுள்ள யாக்கலஸா என்ற குன்று அழும் தன்மை படைத்தது. அதன் அழுகை மழை வருவதற்கு முன்னோடி. அது அழ ஆரம்பித்துவிட்டால் மழை வரப் போகிறதென்று தெரிந்து கொள்ளலாம். நீர் உறிஞ்சும் பாறைகளாலானது அது. காற்றில் ஈரப்பதன் அதிகரிக்கும்போது அது ஈரத்தை உறிஞ்சி வெளியிட ஆரம்பிக்கிறது. அதனை '[illegible] கண்ணீர் விடத் தொடங்கிவிட்டது' என்று குறிப்பிடுகின்றனர் மக்கள்.

---

### இந்தியாவில்

## எதியோப்பிய கடற்படைத் தளபதி

புதுடில்லி, மார்ச் 7

எதியோப்பிய கடற்படை தளபதி, இந்தியாவில் விஜயஞ்செய்துவருகிறார். இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சட்டேர்ஜியின் அழைப்பின் பேரிலேயே அவர் இந்தியா வந்துள்ளார்.

அவர் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயினேயும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் நேற்றுச் சந்தித்தார்.

---

## வார்சோ ஒப்பந்த நாடுகள் மாநாடு

சோபியா, மார்ச் 7

வார்சோ ஒப்பந்த நாடுகள் சோபியாவில் கூடியுள்ளன. வியட்னும், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் இவை உட்படப் பல முக்கிய பிரச்னைகளை இந் நாடுகள் ஆராயும்.

---

## வெளிச்சத்திற்கு ஏற்ப மாறும் கண்ணாடி

மெயின்ஸ், மார்ச். 7

பிரகாசமான வெளிச்சத்திலிருந்து கண்களைப் பாதுகாப்பதற்காக, சிலர் கறுப்புக் கண்ணாடி அணிகிறார்கள். வெளிச்சத்திற்கு ஏற்ப கறுப்பாக்கிக்கொள்ளும் விசித்திரக் கண்ணாடியை ஜெர்மன் நாட்டில்மெயின்ஸ் நகரில் ஒரு கண்ணாடி ஸ்தாபனம் உருவாக்கியுள்ளது. சிலர்பார்வைக்காக அணியும் கண்ணாடி ஒருபுறமிருக்க, கவர்ச்சிக்காக கறுப்புக்கண்ணாடியும் அணியவேண்டும் என்ற அவசியம் இருக்கும். ஆனால் இனிமேல் இப்புதுமைக் கண்ணாடியை அணிபவர்கள் பார்வைக்காக ஒரு கண்ணாடியும், கவர்ச்சிக்காக கறுப்புக்கண்ணாடியும் அணியவேண்டிய அவசியமிருக்காது. இருவிதவேலைகளையும் ஒரேகண்ணாடி செய்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலக தமிழ்கலைச் சொற் தொகுதி உருவாகவேண்டும்"

## திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் கூறுகிறர்

வெள்ளவத்தை, வியாழன்

"இலங்கை, இந்தியா, மலேஷியா எனத் தமிழ் வழங்கும் பல நாடுகளில் உபயோகிக்கப்படும் தமிழ்க் கலைச் சொற்கள் நாட்டுக்கு நாடு வேறு படுவதால் பல பிரச்சனைகள் எழுகின்றன. மொழியாற்றலும், இலக்கிய அறிவும் ஆராய்ச்சித் திறனும் மிக்க அறிஞர்கள் எல்லாம் ஒன்று கூடி அனைத்துலக ரீதியில் ஒரு நிறுவனம் அமைத்து யாவரும் ஏற்கும் வகையில் தரமான புதிய கலைச்சொற்களைச் சமைக்க வேண்டும்."

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் 'மொழி பெயர்ப்புப் பிரச்னைகள்' பற்றி கட்டுரை சமர்ப்பித்து பாராட்டுதலைப் பெற்ற இலங்கை இறைசேரி மொழி பெயர்ப்பாளர் திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் இலங்கை சட்டக் கல்லூரித் தமிழ் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் மேற் கண்டவாறு சொன்னார்.

திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆட்சித் துறையில் ஆங்கிலம் வளர்ச்சியுற்றிருக்கும் மொழி ஆகுல் அவ்வகையில் வளர்ச்சியுறுத நம் தமிழ் மொழியினை ஆட்சித்துறையில் பிரயோகிக்கும் சமயத்தில் பல பிரச்சினைகள் எழுகின்றன. இலக்கண நோக்கிலும் சொற்களின் தேர் வைப் பொறுத்தமட்டிலும் இருவகையில் இத்தகைய பிரச்னைகள் எழுகின்றன. உண்மையான நிலையைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆட்சித்துறை வழக்கிற்கேற்ற சொற்களுக்கு நம் மொழியில் பஞ்சமுண்டென்றே கூறலாம். தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் ஓர் இலட்சத்து இருபத்திநான்கு சொற்களே உண்டு. ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் ஐந்துலட்சம் சொற்கள் உண்டு. இந்த உண்மையினை நாம் ஏற்க வேண்டும். சில சமயங்களில் பல ஆங்கிலச் சொற்களுக்கு ஒரே தமிழ்ச் சொல்லையே உபயோகிக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். அந்த ஆங்கிலச் சொற்களை — கருத்தை வெவ்வேறு இடங்களில் தேவையான முறையில் பாவிக்கலாம்.

திணைக்களம் என்ற தமிழ்ச்சொல் டிபாட்மென்ட்டைக் குறிக்கிறது. இராஜராஜ சோழன் காலத்துக் கல்வெட்டில்கூட இதே கருத்தில் திணைக்களம் உபயோகிக்கப் படுகின்றது. எனவேதான் பல்வேறு நாடுகளிலும் தமிழினை ஆட்சித்துறையில் உபயோகிக்க வேண்டுமானலும் அனைத்துலக நிறுவனம் ஒன்றினை நிறுவி அனைவரும் உபயோகிக்கவல்ல முறையில் தரமான சொற்களைத் தொகுக்க வேண்டும் இலக்கியப் புலமையும், மொழித்திறமையும், ஆராய்ச்சி வல்லமையும் மிக்க நல்லறிஞர்கள் இதே பொறுப்பினை ஏற்று நடாத்த முன்வர வேண்டும்.

## பெற்ருேர் அதிருப்தி

புன்னலைக்கட்டுவன், புதன்

வடபகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் பாடசாலை வகுப்புகளுக்கான இரும்பு வலைகளை போடுவதற்கு மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ரூபா 2 வசூல்செய்யப்படுவது பற்றிப் பெற்ருேரிடையே அதிருப்தி நிலவுகிறது. இப்பணத்துக்கான பற்றுச்சீட்டுகள் கொடுக்கப் படுவதில்லையாம். இது சட்ட விரோதமானதாகும் எனச் சில பெற்ருேர் மேலதிகாரிகளுக்கு அறிவிக்கவிருப்பதாகத் தெரிகிறது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### வெள்ளி 8-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை — என். முத்தையா, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 பண்ணுரிந் தமிழ், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தம்பஇசை.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 நேயர்விருப்பம்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வியாழன்

மாதனை மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் 14 வருடங்களாகத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. சி. சி. வைத்திலிங்கம் திக்கம் சித்தி விநாயகர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சேவை நலம் பாராட்டு விழா

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு மருத்துவ விடுதியில் கடந்த 15 ஆண்டுகளாக மருத்துவமாதாகக் கடமையாற்றி காங்கேசன்துறைக்கு மாற்றலாகிச் சென்ற திருமதி சிதேவிக்கு அனலைதீவுப் பொதுமக்களால் சேவை நலம் பாராட்டு விழா ஒன்று நடாத்தப்பட்டது.

அனலைதீவு கிராமசபை அலுவலகத்தில் திரு. வே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இப் பாராட்டு விழாவின்போது சுகாதாரப் பரிசோதகர் திரு. பெ. துரைராசா, அனலைதீவு வைத்திய அதிகாரி திரு பாலசுப்பிரமணியம், முதலியோர் அவரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

# செய்திச் சுருக்கம்

கிராம சபையின் அதிகாரங்கள்கூட உத்தேச மாவட்ட சபைக்கு இருக்கமாட்டாதென பிரதமர் டட்லி சேனநாயக்கா தெரிவித்துள்ளார். காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் சொன்னார்.

ஃ ஃ ஃ

### நெற்காணிச் சட்டம்

நெற்காணிச் சட்டங்களின் நோக்கங்களை அடைய அரசாங்கம் அதிக சிரத்தை கொண்டுள்ளது என்றும், அதை அமுல்நடாத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கிறதென்றும், உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா கொழும்பில்நடைபெற்றசமச்சேவை உதவி மாவட்ட கமிஷனர் மகாநாட்டில் பேசுகையில் சொன்னார்.

ஃ ஃ

### விசேஷ பொலிஸ் பிரிவு

உல்லாசப் பிரயாணிகள் அதிகமாகச் செல்லும் இடங்களுக்கு விசேஷ பொலிஸ் பிரிவுகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. கொழும்பு, கண்டி, அம்பாந்தோட்டை, காலி, நுவரெலியா ஆகிய இடங்களில் இந்தப் பிரிவுகள் அமைக்கப்படுமெனத் தெரிகிறது.

ஃ ஃ

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

மன்னரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய வெள்ளாங்குளம் கொலை வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப்பாரப் படுத்தப்பட்டுள்ளது. மன்னர் நீதவான் பாரப்படுத்தித் தீர்ப்பளித்தார். இத்தக் கொலை வழக்கில் மண்டைதீவைச் சேர்ந்த சகோதரர்கள் ஏரம்பு சோதிலிங்கம், ஏரம்பு கார்த்திகேசு ஆகியோர் மண்டைதீவு வாசியான சிவஞானசுந்தரம் என்பவரை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஃ ஃ

### இலங்கை படங்களுக்கு முக்கியத்துவம்

இலங்கையில் தயாரிக்கப் படும் படங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தமிழ், ஹிந்தி படங்களின் இறக்குமதியைக் குறைப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஃ ஃ

### இளம் பெண்களுக்குக் கைத்தொழில்

நாத்தாண்டிய தொகுதியைச் சேர்ந்த இளம்பெண்கள் தமது வீடுகளில் இருந்தவாறே செய்யக்கூடிய ஒரு கைத்தொழிலை இத்தொகுதி எம். பி.யும், வர்த்தக மந்திரியுமான திரு. கியு. பெர்ஞண்டோ ஒழுங்குசெய்துள்ளார்.

## இளைஞரை காணவில்லையாம்

உடுப்பிட்டி, வியாழன்

கல்முனையில் வேலை செய்த "அல்வாய்" வாசி மாயமாய் மறைந்துவிட்டாராம். கடந்த பத்துத் தினங்களாக இவரைக் காணுது தவிக்கும் பெற்ருேர், உறவினர்கள் கதறி அழுகின்றனர். அல்வாய் தெற்கு, ஒடை என்னுமிடத்தைச் சேர்ந்த செல்லத்துரை கந்தசாமி [வயது 25] என்னும் இளைஞரே கல்முனையில் காணுமல்போனவர் ஆவார். கல்முனைப் பொலிஸாரும், பருத்தித்துறைப் பொலிஸாரும் துரித புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## தபால் பெட்டி இல்லை

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு அரசடியிலும் வடலூரிலும் தபால் பெட்டி இல்லாமல் இருந்து வருகிறது. இவ்விரு இடங்களும் அரசினரால் அங்கீகாரம் பெற்ற தபால் பெட்டி வைக்கும் இடங்களாயிருந்தும் பெட்டி தட்டுப் பாடு காரணமாக இங்கு பெட்டிகள் வைக்கப்படவில்லையாம்.

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

சங்கானை, புதன்

சண்டிலிப்பாய்மடத்தடிச் சந்தியைச் சேர்ந்தவரும் நான்கு பிள்ளைகளின் தந்தையுமான சின்னவன் அப்பையா [வயது 40] கிணற்றில் வீழ்ந்து மரணமானர். மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்தாரென மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் வி. பத்மநாதன் பிரேத பரிசோதனை நடாத்தினர். மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனுதிராசா நீரில் மூச்சுத்திணறியதால் மரணமடைந்தார் எனத் தீர்ப்பளித்தார்.

## "ஒரே மரத்தின் கிளைகள்"

வெள்ளவத்தை, வியா.

"இந்த உலகில் மதிப்பரிய மானிடப்பிறவி பெற்றுள்ள நாமனைவரும் ஒரே மரத்தின் கிளைகள், இலைகள் போலவும், ஒரே செடியின் மலர்களைப் போலவும் ஒற்றுமையாகவும், சகோதரத்துவமாகவும் வாழ வேண்டும்" என்று வத்தளையில் நடைபெற்ற பஹாய் இயக்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. எ. பேரம்பலம் கூறினர்.

திருவாளர்கள் பெரி முலலர், கே. வீரசிங்கம், இ. சங்கர், கே. டி. ஜி. இரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## "அரசாங்கத்தில் தொழில் கொடுங்கள்"

வெள்ளவத்தை. வியா.

கட்டுப்பத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் நுண் தொழிலாளர் பயிற்சிகளில் [ஜே.ரி ஓ] சித்தியடைந்து வெளியேறியுள்ள மாணவர்களுக்குக் காலந் தாழ்த்தாது உடனடியாக அரசாங்கத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்கவேண்டுமென்றும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கத் தாமதம் செய்வதனுல் இவர்கள், தனிப்பட்ட கம்பெனிகளிலும், கார்ப்பரேஷன்களிலுமே வேலைக்குச் சேர்கின்ருர்களென்றும், இதனுல் அரசாங்கத்திற்குப் பயனில்லாமலிருக்கிறதென்றும் குறிப்பிடும் மகஜரொன்றைத் தொழிலமைச்சுக்கு யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரியின் கொழும்புப் பழைய மாணவர் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியையும் விரைவில் தரமுயர்த்தி அங்கு தமிழ் மாணவர்கள் நுண் தொழிலாளர் மட்டப் பயிற்சிகளை (ஜே. ரி. ஒ.) பயில வசதியளிக்கும்படியும் இம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.


## விவசாயிகளுக்கு அறிவித்தல்

BAYER

இன்றைக்கே பாவியுங்கள்

பொலிடோல் — சர்வ பூச்சிநாசினி

உருளைக்கிழங்கு — வெளிறல் அல்லது வாடல் நோய்க்கு அன்றக் கோல் தந்துகுத்தி. ஆனைப்பேன் ஆகிய பூச்சி புழுக்களை அழிக்க பொலிடோல் அல்லது மெற்றசிஸ்டொக்ஸ்

வெங்காயம் — பனிப்பூச்சி அழிக்க பொலிடோல் அல்லது பொலித்தியோன் களைகட்டடக்தல் களைகொல்லி

கத்தரி — ஆகிய மற்றும் பயிர்களை அழிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களை கட்டுப்படுத்த பொலிடோல் அல்லது மெற்றசிஸ் டொக்ஸ் அல்லது பொலித்தியோன் பாவிக்கலாம்.

கிடைக்கும் இடங்கள்:

'புரேவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ்'
ஒட்டோஸ் கட்டிடம்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 244 & 628

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: "504"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 91 கஸ்தூரியார் ரோட் ''சந்திரா'' அடைவு நிலையத்தில் 1-1-65 தொடக்கம் 1-1-67 முன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவை 8-4-68 திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி நிலையத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
483

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

17-ம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 534- கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5)ம் பிரிவின் 1961-ம் ஆண்டு திருத்தப்படியான 60-ம் இலக்க பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு, யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சுப்பிரமணியம் முருகவேள் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி 1ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி IIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி IIIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IVல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சு. முருகவேள்,
உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,
உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29 மாசி 1968.

அட்டவணை

பத்தி 1. கிராமச் சபையின் பெயர் கொக்குவில்.
பத்தி II திகதி 17-3-68
பத்திIII நேரம்பி.ப 3-30.
பத்தி IV இடம் கிராமச் சபை அலுவலகம் கொக்குவில்.

G. P. 1836

### அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை

கீழே காட்டப்பட்டவை விநியோகிப்பதற்கு இம்மாதம் 11-ந் திகதிக்கு (11-3-68) இடையில் என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பனைமரம் பெருவெட்டு -14 முழத்திற்கு மேல்.
2. கிலாகை.
3. வளை.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5-3-68. 482

### வேலணை கிராமச்சபை கேள்வி அறிவித்தல்

### வேலை விபரம்

மீன்சந்தைக் கட்டிடம்

வேலணை கிராமச்சபைஅக்கிராசனரால் மேற் குறிப்பிட்ட வேலை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் 1968-ம் ஆண்டு பங்குனி மாதம் திங்கட்கிழமை18-ந் திகதி காலை 9-30 மணிவரையும் கிலவைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 17-3-68 பிற்பகல் 2 மணி வரையும் கேள்விப்பத்திரப் பணம்ரூபா 50/- ம் பத்திரப் பணம்ரூபா5/-ம் கட்டியதன் பேரில் உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்களுக்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை கிராமச்சபை காரியாலயத்திலும் வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபரின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

பு. சுப்பிரமணியம்,
தலைவர்,
கிராமச்சபை வேலணை.

481

# மீன்வாடியில் இறந்துகிடந்தார்

## தற்கொலை எனத்தீர்ப்பு

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவைச் சேர்ந்த இரணைப்பாலை வாசியான யோசேப்பு- யேசுராசா (வயது19) என்ற இளைஞர் முல்லைத்தீவு பிரபல வியாபாரியான திரு. எம். எஸ். வஸ்தியாம்பிள்ளையின் மீன் வாடியில் இறந்து கிடக்க காணப்பட்டார். அளம்பில் மரணவிசாரணை அதிகாரி திரு. பி. எஸ். பெர்னாண்டோ மரண விசாரணை நடத்தினார். திரு. எம். எஸ். வஸ்தியாம்பிள்ளை சாட்சியமளிக்கையில், காலம் சென்றவர் தமது மீன் வாடியில் வேலை செய்ததாகவும், சென்ற ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்குப் போனவர் பின்பு திரும்பி வரவில்லையென்றும், காலை அன்ரனி என்னும் தொழிலாளி தன்னிடம் வந்து 'யேசு' வாடியில் இறந்துகிடப்பதாகச் சொன்னாரென்றும், முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் முறையிட்டதாகவும், எக்காரணம் கொண்டு இறந்தார் என்பது தனக்குத் தெரியாதென்றும் கூறினார். காலஞ்சென்றவரின் தந்தை ஞானப்பிரகாசம் யோசேப்பு சாட்சியமளித்தார். முல்லைத்தீவுப் பொலீஸைச் சேர்ந்த திரு. எஸ். தம்பு பொலீஸ் சார்பில் சாட்சிகளைப் பதிவு செய்தார். முல்லைத்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் வே. இராசலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார். நச்சுத் திராவகம் அருந்தியதால்தான் மரணமானார் என்று கூறினார். மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### வர்ண டெலிவிஷன் மோகம்!

பொன், மார்ச்.7

டெலிவிஷன்களில், குறிப்பாக வர்ண டெலிவிஷன்களில், ஜெர்மனியர்கள் மோகம் கொண்டிருக்கிறார்கள். இதுவரை 135 லட்சம் டெலிவிஷன் பெட்டிகளும் 40,000 வர்ண டெலிவிஷன் பெட்டிகளும் விற்பனையாகியிருக்கின்றன. 1970 வாக்கில் 16 லட்சம் வர்ண டெலிவிஷன் பெட்டிகள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது பத்தில் ஒரு ஜெர்மனியரிடம் வர்ண டெலிவிஷன் பெட்டி இருக்கும்.

உதைபந்தாட்டம்

### சென். நிக்லஸ் 1கோலால்வெற்றி

யாழ்ப்பாணம், சனி

அரியாலையின் 49-வது சுதேசிய திருநாட்கொண்டாட்டத்தையொட்டி அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் ஒழுங்குசெய்த யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையேயான 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அரியாலைமத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமானது. 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டிகளில் முதலாவது 'ஏ' பிரிவுப் போட்டியில் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக்கழகமும், நாவாந்துறை சென். நிக்லஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. சமபலத்துடன் மோதி பெரும் பலப்பரீட்சையாகக் காணப்பட்டஇப்போட்டி முடிவில் நாவாந்துறை சென். நிக்லஸ் கோஷ்டி ஒரு கோலால் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

குறிப்பிட்ட நேரத்தில் இரு சாராரும் தலா 3—3 கோல்கள் பெற்றமையால் மேலும் 10 நிமிடம் கொடுக்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாவாந்துறை மேலும் ஒரு கோலைப் போட்டு 4—1 கோலால் கிறீன்பீல்ட்கோஷ்டியை வென்றது. இப்போட்டிக்கு திரு. சற. சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி.நி.]

### சென்- ஜோசப் தோல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி

சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்திற்கும் பிற்லேஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பிற்லேஸ் கோஷ்டி 19 ஓட்டங்களால் சென். ஜோசப் கோஷ்டியைத் தோற்கடித்தது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிற்லேஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது தென். ஜோசப் கோஷ்டி துடுப்பெடுத்தாடி 70 ஓட்டங்களைப் பெற்றது. 2ம் இனிங்சில் பிற்லேஸ்கோஷ்டி 42 ஓட்டங்களும், சென். யோசப் கோஷடி 33 ஓட்டங்களும் பெற்றன. (வி.நி.)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கார்:

E L நாலாயிரம் தொடர் பிலக்க மொறிஸ் மைனர் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 8-ம், 9-ம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை பார்வையிடலாம். Dr. K. பாலசுப்பிரமணியம், டிஸ்பென்சரி, ஆனைப்பந்தி. 1777

காணி:

வேலணை சென்றல் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வளவுடன்கூடிய ஒரு ஏக்கர் வான் பயிர்நிலம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இ. டேவிட். 263, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.1946

நாய்க்குட்டிகள்

நல்ல இனத்தைச்சேர்ந்த பால்குடி மறந்த, ஊசி மருந்து கொடுக்கப்பட்ட ஐந்து வார அல்சேஷியன் நாய்க்குட்டிகள். இல. 8. 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1779

### தேவை

ஆடுகள்:

பால் எடுக்கக்கூடிய சானன் ஆடு ஒன்றும் சானன் கிடாய் ஒன்றும் தேவை. விபரங்களுக்கு: இ. டேவிட், 263, ஆஸ்பத்திரி ரோட்,யாழ்ப்பாணம். 1945

### கல்வி

வகுப்புகள்

ஆங்கிலம்/தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணக்கு வகுப்புகள் நடத்தப்படும். பெண்களுக்கு தனி வகுப்புகள். யூனைடெட் இன்ஸ்ரிட்டியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1778


### உப உணவு பயிர்ச் செய்கை

சங்கானை, வியாழன்

வலிகாமம் மேற்குப் பகுதியில் நெல் அறுவடை முடிவடையும் வேளையில் மழை பெய்ததைத் தொடர்ந்து உப உணவுப் பயிர்ச் செய்கையில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். சங்கானை, சங்கத்தானை, நவாலி, அராலி, வட்டுக்கோட்டை, பண்டைத்தரிப்பு, சண்டிலிப்பாய், சங்குவேலி ஆகிய இடங்களில் பயறு, குரக்கன், எள்ளு, வெங்காயம், மிளகாய் ஆகியன பயிரிடப்பட்டு வருகின்றது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)

4-வது வாரம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m.
Robert Taylor &
Barbara Stanwyck
In
THENIGHTWALKER
[Adults only]

MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m.
Chrisopher Lee
in
DRACULA
Prince of Darkness

ஒப்புக்கொள்ள மறுத்தாலும்
இன்று 75வது தினமே!
ராஜா — யாழ்ப்பாணம்

# காவல்காரன்

அதிஷ்டசாலிகள் யார்?
அதிஷ்டசரலிகள் பலர்
எமது தியேட்டரில் காவல்காரன் படம் பார்க்கும் நுழைவு சீட்டுகளை 26-2-68 திங்கள் முதல் கவனமாக வைத்திருங்கள்.
பல விலையுயர்ந்த பரிசில்கள் கிடைக்கும்.
முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு இந்தியா போய்வர விமான ரிக்கற் அத்துடன் இப்படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகளை நேரில் சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.
பரிசுபெறும் சீட்டுகளின் இலக்கங்கள் தினசரிப் பத்திரிகைகளில் விரைவில் வெளிவரும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் வளர்ந்து வரும் பரதக்கலையில் செல்வி துசிற்றுவுக்கு ஒளிமயமான எதிர்காலம்

## நடிகர் திலகத்தின் பாராட்டை பெற்றவர்



செல்வி துசிற்று திருநாவுக்கரசுவின் பரதநாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 12-ம் தேதி செவ்வாய்க்கிழமை பி. ப. 6 மணிக்கு யாழ்ப்பாணம் நகாமண்டபத்தில் திருகோணேஸ்சர இராச கோபுர நிதிக்காக நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

பல்நெடுங் காலமாகப் பரதக்கலை தமிழ் நாட்டில் சுடர் விட்டுப் பிரகாசித்து வந்தது. தமிழ் மூவேந்தரும் இக் கலைக்கு பேராதரவு தந்து தத்தம் அரண்மனைகளில் அதற்கு முதலிடம் கொடுத்து வந்தனர். தமிழ் வேந்தர்கள் மறைவுடனே பரதக்கலையும் அதன் பிரபையை இழந்து சில கோவில்களில் மாத்திரம் தேவதாசிகளால் ஆடப்பட்டு வந்தது. பரதக்கலையை மறந்திருந்த தமிழ் மக்கள் இப்பொழுது அதனை வளர்ப்பதிற் புத்துணர்ச்சியும் புதிதாக்கமும் காட்டி வருகின்றனர். முக்கியமாக சென்னை கலாக்ஷேத்திரத் தாபகர் திருமதி உருக்குமணி அருந்தேவி ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் பரத நாட்டியத்திற் பெரும் பற்றுக் கொண்டு பல மேடைகளில் நடனமாடத் தொடங்கிய பின்னரே தமிழ் நாடெங்கும் உயர் குடும்பப் பெண்கள் இக் கலையைப் போற்றிக் கற்கத் தொடங்கினர்.

ஈழ நாட்டிலும் இப் பரதக்கலை நன்கு வளர்ந்து வருகிறதென்பதற்குச்சிறுமி துசிற்று ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். சிறுமியாயினும இவர் இக்கலையில் நன்கு முன்னேறியிருக்கிறார். ஆடலிலும் அபிநயத்திலும் இவருக்குள்ள சிறந்த இயல்பூக்கங்கள் இவருக்கு ஒளிமயமான எதிர்காலமுண்டு என்பதனைக் காட்டுகின்றன. சிறு பராயத்திலிருந்தே கலையார்வம் மிகுந்து விளங்கும் இச் சிறுமி இசை, நாடகக் கலைகளுக்குப் பேராதரவு கொடுத்து வந்தவரும் யாழ்ப்பாணம் அப்போதிகரீஸ் தாபகருமான காலஞ்சென்ற திரு. பொன்னுச்சாமி அவர்களின் பேர்த்தியாவர்.

### சிவாஜி புகழ்மாலை

செல்வி துசிற்று கொழும்பு கலாலயத்தில் நடன ஆசிரியைதிருவாட்டி கமலா யோன்பிள்ளையிடம் நடனம் பயில்பவர். சென்ற ஆண்டு யூன் மாதம் கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இவருடைய நடன அரங்கேற்றம் தமிழ்த் திரை, நாடக உலகில் ஒளிர்விடும் நடிகர் திலகம் பத்ம ஸ்ரீ சிவாஜி கணேசன் தலைமையில் நடைபெற்றது. துசிற்றுவின் நடன நிகழ்ச்சியைப் பார்த்துப் பரவசமடைந்த சிவாஜி கணேசன் ''ஆண்டாளே மறுபிறப்பெடுத்து வந்து விட்டளோ!'' என வாயாரப் புகழ்ந்தார்.

### பத்திரிகைகளின் பாராட்டுகள்

''அபிநயம் கண்டேன்:... உண்மையில் ஆடினனே என்றசொல்லுடன் துசிற்று ஆடினளே! ஆனந்தமாக ஆடினளே... மூன்று மணி நேரமாக நடந்த குருஸ்லோகம், அலாரிப்பு, ஜதீஸ்வரம், தில்லானு முதலிய நிகழ்ச்சிகளில் தனதுதிறமை முழுவதையும் அள்ளிச் சொரிந்துவிட்டார். ஆடு மயிலே என்ற பாடலுக்கு அபிநயம் பிடித்த போது மயிலே நம்முன் நின்று சுழன்றுடுவது போல் இருந்தது. பத்மஸ்ரீ அவர்களே துசிற்றுவின் ஆண்டாள் நடனத்தை வெகுவாகப் பாராட்டினர். துசிற்றுவின் ஆடைஅலங்காரம் புதிய முறையில் அமைந்திருந்தது.''

''போற்றற்குரிய நிகழ்ச்சி:... தமிழகத்தின் தலை சிறந்த பரதநாட்டிய நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்த பத்மஸ்ரீ சிவாஜி கணேசனே சிறுமி துசிற்றுவின் நடனத்தைப் போற்றிப் புகழ்ந்தாரென்றால் அக்கலையை நல்ல முறையில் பயின்றிருக்கிறார் துசிற்றுவெனக் கொள்ளலாம். தன் நடன ஆசிரியை கமலா யோன்பிள்ளையின் ஆசியைப் பெற்று நடனத்தைத் தொடங்கியது சிற்று பல மேடைகளில் ஆடி அனுபவம் பெற்ற பிரபல நடன வல்லுநர்கள் போன்று மூன்று மணிநேரம் சளைக்காது ஆடிச் சபையினரின் பெரும் பாராட்டைப் பெற்றார்.''

---

## வவனியா கொலை வழக்கு: 29-ம் தேதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியா கொலைவழக்கில் எதிரியான செல்லப்புவேலாயுதம், கைமோசக் கொலைக் குற்றத்திற்கு குற்றவாளியென ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து, நீதியரசர்பாதுகாப்பு அதிகாரியின் அறிக்கையைசமர்ப்பிக்க கோரிதீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 29ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் 67ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 17-ந் திகதி வவனியாவில் செல்லப்பு வேலாயுதம் என்பவர் மார்க்கண்டு அருணசலம் என்பவரை கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்ப்பில் அட்வக்கேட் ரி. தம்பித்துரை புறக்டர்களான ஆர். விஸ்வநாதன் வி.ஏ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட். சுனில் டி.சில்வா ஆஜரானர்.

அசைஸ் விசாரணை நாளை காலை தொடர்ந்து நடைபெறும்.

---

சைகோன், மார்ச்.7

வியட்னமில் நடைபெற்றுவரும் போரில் இதுவரை 19,000 அமெரிக்க துருப்பினர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

## தேசிய சுவீப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தலா ரூ. 1466-80 சதம் பெறும் டிக்கெட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 03 F 0004 | 56 G 0436 |
| 34 L 0985 | 44 O 0617 |
| 19 H 0826 | 61 F 0051 |
| 51 F 0915 | 45 Y 0039 |
| 35 U 0991 | 32 H 0347 |
| 12 P 0525 | 38 P 0427 |
| 11 G 0586 | 31 M 0486 |
| 53 M 0438 | 29 X 0161 |
| 27 R 0389 | 40 U 0137 |
| 48 K 0836 | 03 C 0936 |
| 16 N 0606 | 46 F 0593 |
| 20 R 0200 | 57 V 0439 |
| 12 O 1550 | 13 L 0236 |
| 31 H 0681 | 45 A 0243 |
| 12 D 0175 | 06 Q 0977 |
| 08 C 0670 | 45 A 0911 |
| 27 D 0396 | 13 R 0503 |
| 36 Y 0060 | 88 P 0919 |
| 40 U 0283 | |
| 60 G 0887 | 55 C 0917 |
| 41 N 0443 | 32 Y 0619 |
| 41 V 0273 | 19 U 0645 |
| 02 B 0737 | 18 Y 0987 |
| 22 V 0498 | 22 S 0582 |
| 04 Q 0075 | 50 R 0832 |
| 25 X 0002 | 31 L 0389 |
| 25 K 0956 | 41 H 0222 |
| 25 L 0826 | 23 S 0090 |
| 17 Y 0800 | 34 D 0021 |
| 28 F 0767 | 31 P 0315 |
| 02 E 0469 | 32 V 0722 |
| 54 U 0989 | 16 V 0508 |
| 38 L 0087 | 55 O 0182 |
| 07 X 0793 | 01 A 0768 |
| 32 K 0433 | 28 R 0299 |
| 16 H 0974 | 20 D 0199 |
| 42 B 0201 | 58 S 0344 |
| 22 K 0459 | 16 A 0459 |
| 04 S 0069 | 61 E 0528 |
| 25 G 0348 | 31 F 0094 |
| 50 R 0873 | 35 D 0908 |
| 27 V 0036 | 09 K 0522 |
| 43 R 0225 | 18 R 0805 |
| 40 E 0040 | 28 B 0113 |
| 21 B 0381 | 22 H 0872 |
| 26 S 0155 | 57 K 0522 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

---

### கச்சதீவு...

1-ம் பக்கத்தொடர்ச்சி

காங்கேசன்துறை, சுங்கனுறமுகம் ஆகிய7 இடங்களிலும் அமைக்கப்படும் பரிசோதனை நிலையங்களில் பரிசோதனைக்குள்ளாவார்கள். இப்பரிசோதனை நிலையங்களில் யாத்திரிகர்களுக்குஊசி போடப்படும்.

இதுதவிர கடற் பகுதிகளில் கடற்படையினர் இரவு பகலாக ரோந்துசுற்றுவார்கள். இங்கிருந்து கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரீகர்கள் 3 நாட்களுக்குத்தேவையான உடுப்பும், உணவும் மாத்திரம் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

[கா. நி]

---

### செல்வி...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

திலுள்ள இணை ஒருன்றில் பொலிஸார் கண்டுபிடித்திருந்தனர்.

இன்று தீர்ப்பு வழங்கப்பட்டபோது செல்வி போவின் எவ்வித துன்ப உணர்ச்சிகளையும் வெளிக்காட்டிக் கொள்ளாதவாறு இருந்தார். அவர் தாம் குற்றவாளியல்ல எனத் தெரிவித்து குற்றவாளி விடுதலை செய்யப்பட்டு விட்டார் எனக் கூறினர். இவர் பின்னர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். போவின் ஏப்ரல் 17-ம் திகதி தூக்கிலிடப்படுவார்.

---

வடபகுதிஅசைஸ் விசாரணை

## தெல்லிப்பளை கொலைவழக்கு: இரண்டாம் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பளை விமலச் சந்திரன் கொலைவழக்கில் இரண்டாம் எதிரியான செல்லையா கந்தையா நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். 1ம் எதிரியான செல்லையா விஜயரத்தினத்திற்கு என்ன தண்டனை வழங்குவதென்பது பற்றி இம்மாதம் 26ந்திகதி தீர்ப்பளிக்கப்படும்.

வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் இவ்வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் 67-ம் ஆண்டுபெப்ரவரி 23 ந்தேதி தெல்லிப்பளையில் முத்தையா விமலச் சந்திரன் என்பவரை, செல்லையா விஜயரத்தினம், செல்லையா கந்தசாமி ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் வி. ராஜரத்தினம், புறக்டர் ஐ. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் ராஜேஸ்வரன் தங்கராஜா ஆஜராகியிருந்தார்.

1ம் எதிரியான விஜயரத்தினம், கைமோசக் கொலைக் குற்றவாளியென ஒத்துக் கொண்டார். 2ம் எதிரி காயம்விளைவித்ததற்குகுற்றவாளியென ஒத்துக் கொண்டார்.

நீதியரசர், 2ம்எதிரியை ஒரு வருடம் 500 ரூபா நன்னடத்தை பிணையில்விடுதலை செய்தார். 1ம் எதிரிக்கு என்ன தண்டனை விதிப்பதென இம்மாதம் 26ம்தேதி ஆலோசிக்கப்படுமென்றும் அதுவரை ரிமாண்டில் இருக்கும்படி உத்தரவிட்டார்.

---

### பெயர் மாறியதால் தற்கொலை செய்தாராம்

கொழும்பு, வியா.

இரத்தினபுரியிலுள்ள கெலியகொடையைச் சேர்ந்த 22 வயதுடைய வி. வி. கருணாரத்தின என்ற வாலிபர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் தமது பெயர் கருணாவதி என்று பெண்ணின் பெயர் இருக்கக் காணப்பட்டதாலும் இதனையிட்டு இவரது நண்பர்கள் கேலி செய்ததாலும் அவமானந் தாங்காது தற்கொலை செய்து கொண்டார்.

---

### தபால், தந்தி...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

பகுதிக்கு விஜயம்செய்தது இ... ...கும். இவர் நேற்றுமாலையே திரும்பினர்.

---

## இன்று

ஊரெழு விநாயகராலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளால் இன்று மாலை 7மணிக்கு 'என்னப்பன் கண்ணப்பன்' என்னும் பொருள் பற்றி கதாப் பிரசங்கம் நிகழ்த்தப்படும்.

(கா. நி.)

ஃ ஃ ஃ

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமான இன்று காலையும் மாலையும் 5-30 மணிக்குப் பஜனையும் மாலை ஆறுமணி தொடக்கம் இரவு 7 மணி வரை திரு. சிவ. வை, நித்தியானந்தசர்மாவினுல் சிவனருட்செல்வர் என்னும்தொடரில் 'இளையான் குடிமாற நாயனர்' என்னும்பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் உள்வீதி உலாவுதலும் பின்னர் இரவு 8 மணிக்குஅர்த்தஜாமப் பூஜையும் நிறைவேறும்.

---

...பிரதமூலம் கொழும்பு திரும்பினர். [கா. நி]

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச்மாதம் 8-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org